06 MAR 2024
சென்னை-600 006

சுருக்கம்

பள்ளிக் கல்வி – மேல்நிலைப் பொதுத் தேர்வு – மேல்நிலைப் பொதுத் தேர்வுகளில், எழுத்துத் தேர்வில் பங்கேற்று, செய்முறைத் தேர்வுகளில் பங்கேற்காமல் தேர்ச்சி பெறாத தேர்வர்களுக்கு மீண்டும் தேர்வெழுத உரிய வழிமுறைகளை பின்பற்றி தேர்வுகள் நடத்திட அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு அனுமதி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித் (அ.தே) துறை

அரசாணை (நிலை) எண்: 61 — நாள் 29.02.2024
திருவள்ளுவர் ஆண்டு 2055
சோபகிருது வருடம், மாசி – 17

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (2டி) எண்.50, பள்ளிக் கல்வித் (அ.தே) துறை, நாள் 09.08.2017.
2. அரசாணை (2டி) எண்.13, பள்ளிக் கல்வித் (அ.தே) துறை, நாள் 20.02.2018.
3. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடித ந.க.எண். 006667/எப்1/2023, நாள் 30.08.2023 மற்றும் 08.02.2024.

**ஆணை:-**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மாணவர்கள் எவ்வித பயமும் இன்றி செய்முறைத் தேர்வை எதிர்கொள்ளும் பொருட்டு மாணவர்களின் நலன் கருதி கருத்தியல் தேர்வில் 70 மதிப்பெண்களுக்கு குறைந்தபட்சம் 15 மதிப்பெண்கள் பெற வேண்டும் என்றும், செய்முறை வகுப்புகளில் பங்கேற்று செய்முறை பொதுத் தேர்வு எழுதி இருக்க வேண்டும் என்றும், எழுத்துத்தேர்வு, அகமதிப்பீடு மற்றும் செய்முறை தேர்வு ஆகியவற்றில் ஒட்டு மொத்தமாக குறைந்தபட்சம் 35 மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும் என்றும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மேல்நிலைப் பொதுத் தேர்வுகளில் கல்வி இணை மற்றும் புறச்செயல்பாடுகளுக்கு அகமதிப்பீடு

(அதிகபட்சம் 10 மதிப்பெண்கள்) பின்வருமாறு வழங்கப்பட வேண்டும் என ஆணை வெளியிடப்பட்டுள்ளது:-

- மாணவர்களின் வருகைப்பதிவு – அதிகபட்சம் 2 மதிப்பெண்கள்
- உள்நிலைத் தேர்வுகள் – அதிகபட்சம் 4 மதிப்பெண்கள்
- ஒப்படைவு /செயல்திட்டம்/களப்பயணம் – அதிகபட்சம் 2 மதிப்பெண்கள்
- கல்வி இணைச்செயல்பாடுகள் – அதிகபட்சம் 2 மதிப்பெண்கள்

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி செய்முறைத் தேர்வில் தேர்ச்சி பெறுவதற்கு குறைந்தபட்ச மதிப்பெண்கள் நிர்ணயம் செய்யப்படவில்லை என்றும், ஆனால் செய்முறைத் தேர்வில் பங்கேற்பது கட்டாயம் என தெரிவிக்கப்பட்டுள்ளதால், மேல்நிலை தேர்வில் செய்முறைத் தேர்வுகளில் பங்கேற்காமல் தேர்ச்சி பெறாதவர்களுக்கு பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றி 2022–2023ஆம் கல்வியாண்டு வரை அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் தேர்வுகள் நடத்தப்படுகின்றன என அரசுத் தேர்வுகள் இயக்குநர் தெரிவித்துள்ளார் :–

1. ஏற்கனவே தேர்வெழுதி, கருத்தியல் தேர்வு மற்றும் அகமதிப்பீடு ஆகிய இரண்டிலும் சேர்த்து 35 அல்லது அதற்கு மேல் மதிப்பெண் பெற்று, செய்முறைத் தேர்வில் பங்கேற்காத காரணத்தால் தேர்ச்சி பெறாதவர்கள், தற்போது செய்முறைத் தேர்வில் மட்டும் பங்கேற்க வேண்டும். அவ்வகை தேர்வர்கள் மீண்டும் எழுத்துத் தேர்வினை எழுத வேண்டாம்.

2. ஏற்கனவே செய்முறைத் தேர்வில் பங்கேற்காமல், கருத்தியல் தேர்வு மற்றும் அகமதிப்பீடு ஆகிய இரண்டிலும் சேர்த்து 35 மதிப்பெண்ணுக்கும் குறைவாக பெற்று தேர்ச்சி பெறாதவர்கள் தற்போது கருத்தியல் தேர்வு மற்றும் செய்முறைத் தேர்வு ஆகிய இரண்டையும் கட்டாயம் எழுதவேண்டும்.

மேலும், மேற்காண் வழிமுறைகளில் வரிசை எண்.2ன்படி தேர்வர்கள் கருத்தியல் தேர்வு மற்றும் செய்முறைத் தேர்வு ஆகியவற்றை எழுதும் போது, சில தேர்வர்கள் (ஏற்கனவே முந்தைய பருவத் தேர்வுகளில் கருத்தியல் தேர்வில் 70 மதிப்பெண்ணுக்கு குறைந்தபட்ச மதிப்பெண்ணான 15 பெற்றிருந்தும்) கருத்தியல் தேர்வில் 70 மதிப்பெண்ணுக்கு குறைந்தபட்ச மதிப்பெண்ணான 15 பெறாமல் தோல்வியடைகின்றனர் என்றும் சில தேர்வர்கள் செய்முறைத் தேர்வில் மட்டும் பங்கேற்று எழுத்துத் தேர்வினை எழுதாமல் இருகின்றனர் என்றும் அதன்பிறகு செய்முறைத் தேர்வில் பங்கேற்றதற்கான மதிப்பெண்ணை பதிவு செய்து மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்படும் போது, ஏற்கனவே எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்ணையும் தற்போது செய்முறைத் தேர்வில் பெற்ற மதிப்பெண்ணையும் ஒரே மதிப்பெண் சான்றிதழில் பதிந்து தருமாறு கோருகின்றனர் என்றும் அரசுத் தேர்வுகள் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. அரசுத் தேர்வுகள் இயக்குநர் மேலும் தமது கடிதத்தில், தேர்வர்களின் நலன் கருதி இனிவரும் காலங்களில் மேல்நிலைப் பொதுத் தேர்வுகளில் எழுத்துத் தேர்வில் பங்கேற்று செய்முறைத் தேர்வில் பங்கேற்காதவர்களுக்கு கீழ்க்காணும் நடைமுறையினை பின்பற்றி தேர்வுகள் நடத்திட ஆணை வழங்குமாறு அரசினை கோரியுள்ளார் :-

"செய்முறைத் தேர்வடங்கிய கருத்தியல் பாடங்களில் கருத்தியல் தேர்வில் 70 மதிப்பெண்களுக்கு குறைந்தபட்ச தேர்ச்சி மதிப்பெண்கள் 15 அல்லது அதற்கு மேல் பெற்று, செய்முறைத் தேர்வில் பங்கேற்காத தேர்வர்கள், செய்முறை தேர்வினை மட்டும் எழுத வேண்டும்."

5. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கருத்துருவை நன்கு பரிசீலித்து அதனை ஏற்று, தேர்வர்களின் நலன் கருதி, மேல்நிலைப் பொதுத் தேர்வுகளில் கருத்தியல் தேர்வில் பங்கேற்று, செய்முறைத் தேர்வுகளில் பங்கேற்காமல் தேர்ச்சி பெறாத தேர்வர்களுக்கு மீண்டும் தேர்வெழுத பின்வரும் நடைமுறையினை பின்பற்றி தேர்வுகள் நடத்திட அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது:-

"செய்முறைத் தேர்வடங்கிய கருத்தியல் பாடங்களில் கருத்தியல் தேர்வில் 70 மதிப்பெண்களுக்கு குறைந்தபட்ச தேர்ச்சி மதிப்பெண்கள் 15 அல்லது அதற்கு மேல் பெற்று, செய்முறைத் தேர்வில் பங்கேற்காத தேர்வர்கள், செய்முறை தேர்வினை மட்டும் எழுத வேண்டும்."

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ.குமரகுருபரன்
அரசு செயலாளர்

<u>பெறுநர்</u>

அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை–6.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
தனியார் பள்ளிகள் இயக்குநர், சென்னை–6.

<u>நகல்</u>

மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
நேர்முக உதவியாளர், சென்னை–6.
பள்ளிக் கல்வித் துறை செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை – 6
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

29/2/2024
பிரிவு அலுவலர்
29/2/24